**தலைப்பு 224 – இலங்கை வான்படை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 224 – இலங்கை வான்படையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஜூலை 21 திகதி வான்படை தளபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

1.2 **கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கூற்று மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. **கணக்குகள்**

---

2.1 **ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

இலங்கை வான்படைக்கு வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 53,653.75 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 35,460.17 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இலங்கை வான்படைக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 18,193.58 மில்லியன் எனப்படும் 33.9 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருவன | 33,994.75 | 31,059.02 | 2,935.73 | 8.64 |
| மூலதனம் | 19,659.00 | 4,401.15 | 15,257.85 | 77.61 |
| மொத்தம் | **53,653.75** | **35,460.17** | **18,193.58** | **33.9** |

**(ஆ) வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் இருந்து வழங்கியிருந்த நிதியேற்பாடுகளைப் பயன்படுத்தல்**

பல்வேறு கருமங்களுக்காக இலங்கை வான்படைக்கு 03 அமைச்சுக்கள் மற்றும் 04 திணைக்களங்களில் இருந்து கூட்டுத்தொகை ரூபா 967.95 மில்லியனிற்கான நிதியேற்பாடுகள் வழங்கியிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அவற்றில் ரூபா 925.77 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கியிருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 42.18 மில்லியன் எனப்படும் 4.36 சதவீதத்திற்கான நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்**

இலங்கை வான்படையினால் 2016 ஆண்டிற்காக 20.03.02.16 கொண்ட வருமானக் குறியீட்டுக்காக ரூபா 170.00 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மதிப்பீட்டு வருமானம் ரூபா 193.75 மில்லியன் எனப்படும் 13.97 சதவீதத்தினால் மிகையாக வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழ் வருமாறு.

| மதிப்பீட்டு வருமானம் | திருத்திய மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | திருத்திய வருமானம் மதிப்பீட்டை மிகைத்தல் | திருத்திய வருமானம் மதிப்பீட்டின் சதவீதமாக மிகைத்தல் |
|---|---|---|---|---|
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 255.00 | 170.00 | 193.76 | 23.75 | 13.97 |

2.3 **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

இலங்கை வான்படைக்குரிய 22401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 550.00 | 387.36 | 460.00 | 465.14 | 1,000.00 | 269.74 |

**2.4 கட்டுநிதிக் கணக்கு**

இலங்கை வான்படையின் கீழ் காணப்பட்ட இலக்கம் 7002/0000/00/0030/0016/000 கொண்ட கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 3.05 மில்லியனாக இருந்தது.

2.5 **பொது வைப்புக் கணக்குகள்**

இலங்கை வான்படையின் கீழ் காணப்படும் 4 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24.02 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **வைப்புக் கணக்குகளின் இலக்கம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0013/0097/000 | 17.67 |
| 6000/0000/00/0002/0065/000 | 1.13 |
| 6000/0000/00/0018/0021/000 | 4.31 |
| 6000/0000/00/0020/0001/000 | 0.91 |
| மொத்தம் | **24.02** |

2.6 **கணக்காய்வு அவதானிப்பு**

இலங்கை வான்படையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ளன.

3. **பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.1.1 பாதீட்டு முரண்கள்**

மீளாய்வாண்டு தொடர்பாக 43 செலவு விடயங்களில் மிகையேற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் பயன்படுத்திய பின்னர் சேமிப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய ஏற்பாடுகளில் 12 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சு அளவினைக் கொண்டிருந்தது. 2016 வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் 224-1-3-2502(12) மற்றும் (17) ஆகிய செலவு விடயங்களின் கீழ் கூட்டுத்தொகை ரூபா 13,250 மில்லியனிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த மொத்த நிதியேற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது. 2016 ஆண்டின் போது ரஷ்யா கடன் திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்காக திட்டமிட்டிருந்த முழுமையாக பழுதுபார்த்தல் நிலையத்திற்காக ரூபா 1,400 மில்லியன் ஏற்பாடுகள் விண்ணப்பித்திருந்த போதிலும், அதற்காக வருடாந்தப் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 13.250 மில்லியன் இற்கான நிதியேற்பாடுகள் அச் செலவு விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததென வான்படைத் தளபதி கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

**3.2 பொது வைப்புக் கணக்கு**

இரண்டு வைப்புக் கணக்குகளில் 2 வருட காலமாகக் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 99,998 தொகைக்கான வைப்பு மீதி தொடர்பாக மீளாய்வாண்டு இறுதி வரை நிதிப் பிரமாணம் 571(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 வருமானக் கணக்குகள்**

வான் படைத்தளபதி வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் 20.03.02.16 கொண்ட ஆகாய விமான வாடகை வருமானக் கணக்கு தொடர்பாக வருமான மதிப்பீடுகள் தயாரித்தல், வருமானத்தை சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் பொறுப்புக்கள் சாட்டப்பட்டிருந்தது. அந்த வருமானக் குறியீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருந்த வருமானக் கணக்கின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 13.47 மில்லியன் தொகை நிலுவை வாடகை காணப்பட்டதுடன் அந்த நிலுவை வருமானம் 01 வருடம் முதல் 15 வருடங்கள் வரையான காலவீச்சிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்தது. நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் தொடர் செயல் நடவடிக்கை பலவீன நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) இலங்கை வான்படைக்காக விமானங்கள் வாடகைக்கு கொடுப்பதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை சேகரிப்பதற்கான வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற

வகையில் வான்படைத் தளபதி செயற்பட வேண்டும். எவ்வாறாயினும் அவரின் நேரடி கண்காணிப்பின் கீழ் செயற்பாட்டு விடயங்கள் நடைபெறுவதற்குப் பதிலாக தனியார் நிறுவனம் ஒன்றினால் கம்பினயின் பேரில் வழங்கப்பட்டிருந்த பற்றுச் சீட்டுப் புத்தகங்களை பயன்படுத்தி விமானங்களை வாடகைக்குக் கொடுப்பதன் மூலம் வருமானங்கள் சேகரிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு சேகரிக்கப்பட்டிருந்த வருமானங்கள் இலங்கை வான்படைக்கு அனுப்பி வைப்பதற்கு நீண்டகாலம் கடந்திருந்தது.

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த விடய இலக்கம் 22401 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவைகளாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,592,838 தொகையாகக் காணப்பட்டது. 01 வருடம் முதல் 05 வருடம் வரையான காலம் முதல் காணப்பட்டு வரும் கூட்டுத்தொகை ரூபா 11,473,624 இற்கான மீதிகள் மற்றும் 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்பட்டு வரும் கூட்டுத்தொகை ரூபா 9,119,214 தொகையான நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்யும் தொடல்செயல் நடவடிக்கை பலவீன நிலைமையில் காணப்பட்டது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

இலங்கை வான்படையின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) சொத்துக்கள் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஜூன் 05 திகதி PCMD/RP/2013 ஆம் இலக்க ஜனாதிபதி செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டும் அழிவு அடைந்து கொண்டு காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் ஆகியவற்றை 3 மாதங்களுக்குள் அகற்றுவதற்கு அல்லது ஏல விற்பனையின் மூலம் விற்பனை செய்வதற்காக அல்லது நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் அகற்றுதல் செயற்பாடுகளுக்கு இணங்க ஒருவெல உருக்குக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் இலங்கை வான்படைக்குச் சொந்தமான பயன்படுத்த முடியாத அகற்றுவதற்காக ஒப்படைக்கப்பட்ட 67 வானங்கள் கடுநாயக வழங்கள் மற்றும் பராமரிப்பு பிரிவில் 2017 மே 31 திகதி வரை நான்கு வருடங்களுக்கு மிகையான காலம் முதல் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது. மேலும் பழுதுபார்க்கக் கூடியதாக இருந்த 79 வாகனங்கள் கடுநாயக மற்றும் வவுனியா இயந்திர போக்குவரத்து திருத்தும் மற்றும் பராமரிக்கும் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ii) கடுநாயக வான்படை முகாமில் வழங்கள் மற்றும் பராமரிப்புப் பகுதியில் பிடவை களஞ்சியத்தில் உச்ச மட்ட இருப்பு மட்டத்தை மிகைத்து ரூபா 75,088,113 தொகை பெறுமதியான பிடவை இருப்பொன்று பயன்படுத்தப்படாமல் 1 வருடம் முதல் 2 வருட கால காலவீச்சில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

இலங்கை வான்படையினால் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 765,498,905 தொகையாக காணப்பட்டதுடன், அது தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஆகாயவிமான உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய கொள்வனவுகளுக்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 3,241.36 மில்லியன் தொகை பொறுப்புக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 20 செலவு விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதியேற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் மீதியை மிகைத்து ரூபா 223.85 மில்லியன் தொகை பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தது.

**3.6 இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

29 செலவு விடயங்களுக்கான பண்டங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 99,424,634 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 237 இற்கு முரணாக குறிப்பிட்ட பண்டங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் அக் கொடுப்பனவு உறுதிச்சான்றினை சான்றுபடுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.7 செயலாற்றுகை**

2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலங்கை வான்படையின் முன்னேற்றம் தொடர்பாக அவதானிப்புக்கள் பின்வருமாறு.

**(அ) பிரதான கருமங்களுக்கு முரணாக செயற்பாடுகள்**

இலங்கை வான் படைக்குச் சொந்தமாக பௌதீக மற்றும் மனித வளங்களைப் போலவே நிதியங்களைப் பயன்படுத்தி வான்படைக்கு சொந்தமான தனியார் நிறுவனம் ஒன்றாக நடத்தப்படும் ஹெலிடுவர்ஸ் கம்பனி 2010 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை 07 வருட காலப்பகுதியில் ரூபா 43.7 மில்லியனிற்கான இலாபமொன்றினை ஈட்டியிருந்த போதிலும், இலங்கை வான் படையினால் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டிற்கான நலனாக பங்குலாபத்தை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) போதியளவு மேற்கொள்ளப்படாத பிரதான கருமங்கள்**

வவுனியா வான்படை தள முகாமில் 2எம்டீஆர் மற்றும் ஓடப்ளியூ அலகுகள் மூலம் மோட்டார் வாகனம் பராமரித்தல், நவீனமயப்படுத்தல் மற்றும் திருத்தி மீளமைத்தல் என்பன நடைபெறுகின்றது.

இந்த அலகு நிறுவப்பட்டு 2 வருடங்களை விட கூடுதலான காலம் கடந்திருந்ததுடன் 2016 திசெம்பர் 02 ஆம் திகதி வரை பழுதுபார்த்தல் வேலைக்காக 55 மோட்டார் வாகனங்கள் கிடைத்திருந்தன. அவற்றில் 19 மோட்டார் வாகனங்களின் பழுதுபார்த்தல்கள் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு திருப்பி ஒப்படைக்கப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டது. அதேபோல் இவ்விடயங்கள் முறைசார் விதமான மற்றும் செயற்திறமையுடன் நடாத்துவதற்காக தேவையான பதவியணியினர்கள் பதவிகளில் 33 வெற்றிடங்கள் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக 10 மோட்டார் வாகன என்ஜின்களின் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்காக ரூபா 4,739,060 இற்கான கிரயத்திற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு 2016 ஜூன் 05 திகதி சாட்டப்பட்டிருந்தது.

**(இ) உள்ளக நிதியங்கள் நடத்துதல்**

பின்வரும் அதவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 நவம்பர் 30 திகதிய 852 ஆம் இலக்க வான்படைத் தளபதியின் வான்படை கட்டளையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை வான்படைத் தலைமையகத்தின் பல்வேறு பாசறை மற்றும் அலகுகளில் 97 உள்ளக நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த நிதியங்களின் செயற்பாட்டு விடயங்களுக்காக மற்றும் நிதியங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் இலாபம் உழைக்கும் செயற்திட்டங்களுக்காக இலங்கை வான்படைக்குச் சொந்தமான பௌதீக மற்றும் மனித வளங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியமைப்பின் 149(அ) ஆம் உருப்புரையின் பிரகாரம் ஏதேனும் எழுத்துமூல சட்டத்தின் கீழ் காட்டப்பட்டிருக்காத குடியரசுக்கு கிடைக்கும் அனைத்து பெறுவனவுகளும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டுமெனினும், அந்த நிதியத்தின் மூலம் உருவாக்கும் வருமானத்தை அரசாங்க வருமானத்திற்கு சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2016 ஜுலை 29 ஆம் திகதிய 7/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியமைப்பின் 148 ஆம் உருப்புரை மற்றும் 2015 செப்தெம்பர் 21 திகதிய 1933/15-2015 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் குறிப்பிட்டுள்ளவாறு நிதியங்களை மீளாய்வு செய்து சுற்றறிக்கையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த படிவத்தின் பிரகாரம் அதனை வெளியிட்டுள்ள திகதி முதல் 14 நாட்களுக்குள் பொது நிதி பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. இலங்கை வான்படையினால் நியதிச் சட்ட முறையான மற்றும் நியதிச் சட்டமுறையல்லாத 97 நிதியங்கள் நடத்தப்பட்டிருந்ததுடன் அவற்றில் 07 நியதிச் சட்ட நிதியங்களின் தகவல்கள் மாத்திரம் 2016 செப்தெம்பர் 02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஏனைய நிதியங்கள் மீதான தகவல்கள் 2017 ஜுன் 30 திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

இலங்கை வான்படையினால் 2016 ஆண்டின் போது பல்வேறு நிர்மாண வேலைகளுக்காக வான்படையின் நிர்மாணவேலை செயற்திட்டங்களினால் 13,641 கியூப் கருங்கற்கள் மற்றும் 5,475 கியூப் மணல் என்பன வழங்கப்பட்டிருந்தன. எனினும் அச் செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகள் மற்றும் அதன் மூலம் கிடைக்கும் வருமானங்கள் கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

**3.9 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்**

இலங்கை வான்படையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறைசார் விதம் இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டன. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் நடைமுறையில் இருந்து விளகல்**

-----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரத்மலான வான்படை பாசறைக்காக ரூபா 3,169,622 தொகை பெறுமதியான தயாரிக்கப்பட்ட கொங்கிரீட் 187 கியூப்கள் கொள்வனவு செய்யும் போது பதிவு செய்யப்படாத 07 வழங்குனர்கள் உட்பட 87 வழங்குனர்களிடம் விலைகோறல் அழைக்கப்பட்டிருந்தது. அவ் விலைகோரல் தாரர்களில் கொங்கிரீட் கலவை வழங்கள் மேற்கொள்ளாத நிறுவனங்களில் இருந்து விலைகோரல் அழைத்திருந்ததாக அவதானிக்கப்பட்டது. அவ்விலைகோரல் தாரர்களிடம் பதில் அனுப்பியிருந்த ஒரேயொரு வழங்குனருக்கு விலைகோரல் வழங்கப்பட்டிருந்தது. அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 6.2.2 வழிகாட்டலின் பிரகாரம் விலைகோரலுக்கான அழைப்புக்கள் 21 நாட்கள் குறைந்த பட்ச காலம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கை வான்படைக்குச் சொந்தமான ஆகாயவிமானம் ஒன்றின் இன்ஜினை திருத்துவதற்காக ரூபா 10,931,111 தொகை செலவிடப்பட்டிருந்தது. அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 7.12.1 வழிகாட்டலின் பிரகாரம் ஆக்கபூர்வமான போட்டித் தன்மையொன்று காணப்படாத விலைகூறலை இரத்துச் செய்ய முடியும் எனினும், அந்த திருத்த வேலைக்காக விலைகூறல் சமர்ப்பித்திருந்த ஒரேயொரு வழங்குனருக்கு ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது. மேலும் அவ்வழிகாட்டல் கோவையின் 6.2.2 வழிகாட்டலின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட சர்வதேச விலைகூறல்கள் அழைக்கும் போது குறைந்த அளவு 42 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் எனினும், அவ்வாறு செய்திருக்கவில்லை.

(iii) வவுனியா வான்படை ஆதார பாசறையில் வான்படையின் உணவுக் களஞ்சியத்தில் குளிர் அறைத் திருத்த வேலைக்காக 2016 ஜூன் 18 திகதி ரூபா 125,000 தொகைக்காக வாயு அமுக்க இயந்திரமொன்று கொள்வனவு செய்திருந்ததுடன் அதனை பொறுத்தி சில மணித்தியாலங்களின் பின்னர் செயலிழந்திருந்தது. அவ் இயந்திரத்திற்கான உத்தரவாதச் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2016 பெப்ரவரி மாதம் முதல் 2017 ஜூன் 31 திகதி வரை குளிர்அறை செயற்படாத சொத்தொன்றாக காணப்பட்டதென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**3.10 இழப்புக்களும் சேதங்களும்**

-----------------------------------------

70 சம்பவங்கள் தொடர்பாக 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 30.39 மில்லியன் தொகைக்கான இழப்புக்கள் மற்றும் சேதங்களை அறவீடு செய்வதற்காக, பதிவழிப்பதற்காக இலங்கை வான்படை 2016 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------

இலங்கை வான்படையினால் 2009 ஆண்டின் போது இரண்டு தனியார் நிறுவனங்களில் இருந்து ரூபா 191,961,000 தொகை பெறுமதியான 187 சூரியசக்தி வீதி விளக்குகள் 15 வருட உத்தரவாத காலத்துடன் கொள்வனவு செய்வதற்காக 2009 மே மாதத்தில் உடன்படிக்கை கையொப்பமிட்டிருந்தது. அதன் பிரகாரம் 2009 ஆண்டின் போது பொருத்தப்பட்டிருந்த வீதி விளக்குகள் மற்றும் பற்றரிகளில் ரூபா 16,024,000 தொகை பெறுமதியான 148 வீதி விளக்குகள் மற்றும் 33 பற்றரிகள் 2015 ஏப்ரல் 20 திகதி அளவில் செயற்படாது காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் ரூபா 19,961,000 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக கடந்த

ஆண்டிற்கான கணக்காய்வின் போது சுட்டிக் காட்டியிருந்த போதிலும் அங்கு இது தொடர்பாக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்திருந்தார். அவ்வாறாயினும் 2017 ஜூன் 03 திகதி வரையும் அவ்வேலைகளை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.12 மனித வள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி யினர் | உள்ளவாறான பதவியணி யினர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | **சிவில் பகுதி** | | | |
| (i) | சிரேஷ்ட நிலை | 07 | 04 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 04 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 193 | 85 | 108 |
| (iv) | ஆரம்ப நிலை | 3,340 | 2,684 | 656 |
| (v) | ஏனையவைகள் (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 430 | 100 | 330 |
| | **சேவைப் பகுதி** | | | |
| (vi) | உத்தியோகத்தர்கள் | 2,156 | 1,784 | 372 |
| (viii) | ஏனைய பதவிகள் | 35,844 | 34,534 | 1,310 |
| | **மொத்தம்** | **41,975** | **39,195** | **2,780** |